RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s22276

OPEN ACCESS

# கருத்தியல் நோக்கில் பாமாவின் புதினங்கள்

**சி. இராகினி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா

# Bama's Novel from a Conceptual Perspective

**C. Rahini** [a, *]

[a] Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author:
rahini.ma.2016@gmail.com

Received: 22-09-2022
Revised: 15-11-2022
Accepted: 22-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Three novels of the woman writer Bama namely Karukku, Sangathi and Vanmam have been taken for this review. Each of Bama's novels is a record of her direct experiences in life. These three novels of Bama are meant to reveal the life of the Paraiyar category people. This article is about the ideology, ideology in Tamil literary context, purpose of ideology, change in ideology and ideology in Bama's innovations. Novel Karukku when viewed conceptually it shows the lifestyle of the Paraiyar people and the difference between high and low class people in the schools and about the monasteries run by the Jesus Church. Sangathi novel depicts the life conditions of Paraiyar women. Novel Vanmam depicts the conflict between Paraiyar and Pallar clans. The rising voice of the educated youth is to get their rights from the ruling class is also heard in this novel. The plight and situation of women affected because of the conflicts between these two clans is also explained. One can see the physical strength and mental strength of the women in this novel. When we look at these novels together, it can be seen that the ideologies of Dalitism and Dalit feminism emerge in the context of caste conflict between Paraiyar and Pallar, the life of Paraiyar people and the living conditions of Paraiyar women.

**Keywords:** Bama, Paraiyar, Women, Karukku

## முன்னுரை

இலக்கியங்கள் பல வடிவங்களில் படைக்கப்படுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியங்கள் அனைத்தும் இலக்கணக் கட்டு கோப்புகளுக்கு உட்பட்டு செய்யுள் வடிவில் படைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து அடுத்தடுத்த நூற்றாண்டுகளிலும் செய்யுள் வடிவிலும் பல கட்டமைப்புகளை ஏற்படுத்தி இலக்கியங்கள் படைக்கப்பட்டன. நவீன காலங்களில் கால மாற்றத்திற்கேற்ப, வாசகர்களின் புரிதல் தன்மைக்கேற்ப இலக்கிய வடிவங்களும் மாற்றம் பெற்றன. கி.பி 19 ஆம் நூற்றாண்டுகளில் கவிதை, சிறுகதை, புதினம், நாடகம், கட்டுரை போன்ற இலக்கிய வடிவங்களில் படைப்பாளர்கள் தங்கள் படைப்புகளைப் படைத்தனர். இவ்விலக்கிய வடிவங்களின் மூலம் சமூகத்தின் அனைத்து பாடுபொருள்களும் எடுத்துரைக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. இவ்விலக்கிய வடிவங்களில் எழுத்தாளர் பாமா அவர்கள் புதினத்தின் வழி தான் கண்ட சமூத்தின் அனுபவங்களைப் பதிவுச் செய்திருக்கிறார். அதனால் பாமாவின் புதினங்கள் ஒவ்வொன்றும் எவ்விதமான கருத்தியல்களை வாசகர்களுக்கு வெளிப்படுத்தியுள்ளன என்பதை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## எழுத்தாளர் பாமா

பெண் எழுத்தாளரான பாமா 1958 ஆம் ஆண்டு மதுரை அருகிலுள்ள புதுப்பட்டியில் பிறந்தவர். தற்போது உத்திரமேரூர் அருகிலுள்ள ஒங்கூர் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். 65 வயது நிரம்பும் பாமா தன் முதல் படைப்பாக 1992 ஆம் ஆண்டு கருக்கு என்ற முதல் தன் வரலாற்று புதினத்தை எழுதினார். வாசகர்களிடத்தே பெறும் வரவேற்பை பெற்ற புதினமாக கருக்கு திகழ்ந்தது. இன்றும் வாசகர்களால் தேடி படிக்கப்படும் புதினமாகவும் கருக்கு திகழ்கிறது. கருக்கு புதினத்தை தொடர்ந்து சங்கதி, வன்மம், மனுசி ஆகிய புதினங்களையும் பாமா படைத்திருக்கிறார். புதினம் தவிர்த்து கிசும்புக்காரன், கொண்டாட்டம், ஒரு தாத்தாவும் எருமையும் என்ற சிறுகதை தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார். இவரது புதினம், சிறுகதை அனைத்தும் ஒடுக்கப்பட்ட மக்கள் பற்றிய பதிவுகளை தருவதாகவே உள்ளது. தன் சமூகத்தின் வாழ்நிலை இங்குள்ளவர்களுக்கு மட்டும் தெரிந்தால் போதது பிற நாட்டில் உள்ளவர்களுக்கும் தெரிய வேண்டும் அப்போதுதான் அவர்கள் வாழ்வில் விடியல் தோன்றும் என்ற எண்ணத்தோடு தன் படைப்புகளை ஆங்கிலம், தெலுங்கு, பிரெஞ்ச் ஆகிய மொழிகளிலும் மொழிப்பெயர்க்க தந்துள்ளார். புதிய புத்தகம் பேசுது மகளிர் தின சிறப்பிதழ் ஒன்றில் லட்சியம்னு ஏதாவது வைச்சிருக்கீங்களா? என்று கேட்கப்பட்ட கேள்விக்கு பாமா அளித்த பதில், “மக்கள் பிரச்சினையை எழுதுனும். வெளிப்படுத்தனும் என்பதுதான் முக்கியம். என்னை பாதிக்கிற விசயங்களை எழுதுவேன். விமர்சனங்களுக்கு நான் என்னை மாத்திக்கிட்டு சமரசம் பண்ணிக்கமாட்டேன். விருதுக்காகவோ அங்கீகாரத்துக்காகவோ எழுதுமாட்டேன். விமர்சிப்பது அவர்கள் சுதந்திரம். எழுதுவது என் கடமை என்று கூறியுள்ளார்.

## கருத்தியல்

கருத்தியல் என்பதற்கு சித்தாந்தம், கோட்பாடு, கருத்துரு, தத்துவம், பார்வை, ஒரு குழு அல்லது தேசத்தின் சிந்தனையை வகைப்படுத்தும் ஒரு நோக்குநிலை ஆகிய பொருள்களை அகராதி தருகிறது. அதோடு கருத்தியல் என்பதற்கு அறிஞர்கள் பலரும் பல்வேறு விதமான விளக்கங்களை முன்வைத்துள்ளனார்.

“தன்னைச் சுற்றிலும் உள்ள சமூகத்தை அறிவது கருத்தியல் என்று கூறுவது சரியாக இருக்கும்” (Kanal Maithan, 2019)

“கருத்தியல் என்பது தனி ஒருவர், ஒரு குழு, ஒரு சமூகம் பெற்றிருக்கும் வரன்முறை நம்பிக்கைகள், மன எண்ணக்கருக்கள் ஆகியவற்றின் நுண்ணிலைத் தொகுப்பாக காணப்படுவதுடன், அது உலகப் பார்வை, கற்பனை (சமூகவியல்), இருப்பியல் (மெய்யியல்) ஆகியவற்றை விடக் குறுகிய கருத்துப்படிமம் கொண்டதாகும்.” (Naseem, 2019)

கருத்தியலானது பிரபலமான ஒரு சிந்தனையாளர் அல்லது பல சிந்தனையாளர்களின் கற்பிதங்கள் மற்றும் கருத்துக்களின் தொகுதியாக கட்டியெழுப்பட்டிருக்கலாம். அல்லது பிரதான ஒரு சிந்தனையாளரின்றி சிந்தனையாளர்கள் பலரினால் முன்வைக்கப்பட்ட கருத்துகளின் வளர்ச்சியின் பெறுபேறாக கட்டியெழுப்பட்டிருக்க முடியும்” (Naseem, 2019).

சமூக அல்லது அரசியல் தத்துவத்தின் ஒரு வடிவம், இதில் நடைமுறைக் கூறுகள் கோட்பாட்டு கூறுகளைப் போலவே முக்கியத்துவம் வாய்ந்தவை. இது உலகத்தை விளக்குவதற்கும் அதை மாற்றுவதற்கும் விரும்பும் ஒரு யோசனை அமைப்பு".

மேற்கண்ட அறிஞர்களின் கருத்துகளை நோக்கும் போது கருத்தியல் என்பது சிந்தனையின் வெளிப்பாடு மற்றும் பல்வேறு அறிஞர்களின் சிந்தனையின் வெளிப்பாடாக தோன்றிய கருத்துகளின் தொகுதி மற்றும் வளர்ச்சி நிலையை கருத்தியலாக கொள்ளலாம் என்று அறிய முடிகிறது.

## தமிழ் இலக்கிய சூழலில் கருத்தியல்

அரசியல், மருத்துவம், பொருளாதாரம், அறிவியல், சட்டம், மருத்துவம், இலக்கியம் என ஒவ்வொரு துறையிலும் துறைச் சார்ந்த கருத்தியல்கள் முன்வைக்கப்படுகின்றன. அவ்வகையில் படைப்பிலக்கியம் சார்ந்த கருத்தியல்களும் சிந்தனையாளர்களால் மொழிப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியச் சூழலில் இலக்கியங்கள் பல வடிவங்களில் படைக்கப்படுகின்றன. காலத்திற்கேற்ப பல பாடுபொருள்களை தன்னகத்தே கொண்டு வளர்ச்சி பெற்றுவருகின்றன. அப்பாடுபொருள்களின் அடிப்படையிலே காந்தியம், திராவிடம், பிராமணியம், மார்க்ஸியம், தலித்தியம், பெண்ணியம், நவினத்துவம், பின்நவினத்துவம், அமைப்பியல், பின்னை அமைப்பியல், பின்னை காலனித்துவம் போன்ற கருத்தியல்கள் உருக்கொண்டு வளர்ச்சிபெற்றிருக்கின்றன.

## பாமாவின் புதினங்களில் கருத்தியல்கள்

பாமாவின் மூன்று புதினங்களும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்நிலை, ஒடுக்கப்பட்ட பெண்களின் வாழ்நிலை என்ற இரண்டை மிக விரிவாக பேசுகிறது எனலாம். அதன் அடிப்படையில் பாமாவின் மூன்று புதினங்களும் தலித்தியம், தலித் பெண்ணியம் என்ற இரண்டு கருத்தியல்களை எடுத்துரைக்கிறது என்பதை அறிய முடிகிறது. பாமாவின் புதினங்களில் இக்கருத்தியலின் கருத்துகள் எவ்விதம் பதிவுச் செய்யப்பட்டள்ளன என்பதை அறிவதற்கு முன்னர் தலித்தியக் கருத்தியல் மற்றும் தலித் பெண்ணியக் கருத்தியல் என்பது குறித்து அறிந்துகொள்வது அவசியமாகிறது.

## தலித்தியக் கருத்தியல்

ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிக்காக சிந்தித்தவர்களின் கருத்துக்கள் மற்றும் கருத்துகளின் தொகுதி, கருத்துகளின் வளர்ச்சிநிலையை தலித்தியக் கருத்தியல் எனலாம். அவ்வகையில் தமிழக அளவில் அயோத்திதாச பண்டிதர், இரட்டைமலை சீனிவாசன், எம்.சி.ராஜா மற்றும் மாராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த டாக்டர் அம்பேத்கார் ஆகியோர் ஒடுக்கப்பட்ட மக்கள் குறித்த தங்கள் சிந்தனைகளை முன்வைத்தனர். ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உரிமைகள், வாழ்வியல் மேம்பாடு, கல்வி குறித்த சிந்தனைகள், தொழில் முன்னேற்றம், இடஒதுக்கீடு, வேலைவாய்ப்பு என பல நிலையில் ஒடுக்கப்பட்ட மக்கள் குறித்த சிந்தனையின் வெளிப்பாடகவே தலித்திய கருத்தியல்கள் தோற்றம்பெற்றன.

## தலித் பெண்ணியக் கருத்தியல்

சமூகத்தில் பெண்கள் அனைவரும் ஒரே நிலையில் இருப்பதில்லை. சாதியின் அடிப்படையில் ஒடுக்கப்பட்ட பெண்கள் பிற பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை விட கூடுதலான சவால்களை சந்திக்கவேண்டியிருக்கிறது என்பதை கூறுவது தலித் பெண்ணியம். பெண் சுதந்திரம், பெண் உரிமை, பெண்கல்வி, விதவை மறுமணம், சொத்துரிமை, வீட்டு வன்முறை, மணவிலக்குச் சட்டம், பாலியல் வன்முறையை எதிர்கொள்வது, என பெண்ணின் நலன் சார் சிந்தனைகளின் தொகுப்பு தலித் பெண்ணியக் கருத்தியல் எனலாம்.

## கருத்தியலின் நோக்கம்

படைப்பின் மூலம் பல்வேறு விதமான கருத்துக்களை முன்வைக்கும் படைப்பாளர்களின் கருத்துகளின் தொகுதியும் கருத்தியல்களாக உருக்கொள்கின்றன. அவ்வாறு உருவாகும் கருத்தியலின் முக்கிய நோக்கம் சமூக மாற்றத்திற்கு வித்திடுவதாக அமைய வேண்டும் என்றும் கூறப்படுகிறது. அவ்வகையில் பாமாவின் படைப்புகளில் பறையர் இன மக்கள் வாழ்வில் ஏற்படும் சமூக மாற்றமாக, இதுநாள் வரையில் ஆதிக்கவர்க்கத்தரின் அடக்குமுறைகளை எதிர்த்து எந்தவிதமான கேள்விகளையும்

கேட்காமல், அவர்கள் சொல்வதை செய்யவும், அடிமைகளாகவும் மட்டுமே படைப்புகளில் காட்டப்பட்ட சூழலில், பாமாவின் வன்மம் புதினம்.

“நீங்க என்ன பெரிய கொம்பா? நீங்க இருந்தா, நாங்க சிரிக்கக் கூடாதா? பேசக்கூடாதா? இது சனநாயக நாடு நாங்க எங்னகுள்ளயும் பேசுவோம். சிரிப்போம். வௌாடுவோம். செயிப்போம். இந்தா பாத்தியா வாலிபால் வௌாண்டு செயிச்ச கப்பு (Bama, 2019a). நல்லா பாத்துக்கோ. சொல்லிக்கிட்டே கப்பத் தலைக்கு மேல தூக்கிக்கிட்டு ஒரு சுத்துச் சுத்துனான் அந்தோணி.” (Bama, 2019a) என்ற பதிவு ஆதிக்கவர்க்கத்தாரை எதிர்க்கவும், தங்களின் உரிமையை கேட்கவும் அம்மக்களிடம் உரிமை வேட்கை வந்துள்ளதைக் காட்டுகிறது. அதுபோல ஒடுக்கப்பட்ட மக்கள் என்றால் கல்வி மறுக்கப்பட்ட நிலையில் அல்லது கல்வி கற்பதற்கான பொருளாதார வசதி இல்லாமல் கல்வியறிவு இல்லாத மக்களாக பதிவுசெய்யப்படும் நிலையில்,

“ஐயய்யோ அப்பிடிச் சொல்லாதீக. அவுக தெருவுலருந்து டீச்சருக, டாக்டருக, வக்கீலுக, காலேசு வாத்தியாருக அப்பிடி இப்பிடின்னு நெறய்யாப் படுச்சுட்டாக” (Bama, 2019a)

என்று பாமாவின் மூன்று புதினங்களும் பறையர் இன மக்களை கல்வி கற்றவர்களாகவும், உயர் பதவிகளில் பணியாற்றுபவர்களாகவும் காட்டுகிறது. இத்தகு சமூக மாற்றத்தோடு, இனத்தின் அடிப்படையில் அமைந்திருக்கும் குடியிருப்புகளின் வரிசைமுறை, ஆதிக்கவர்க்கத்தார் பறையர் மீது காட்டும் தீண்டாமை வெறுப்புணர்ச்சி, பறையர் இனமக்கள் இழிவான வேலைகளை செய்யும் நிகழ்வுகள், பறையர், பள்ளர், சாலியன் இனத்தாருக்குள் ஏற்படும் சாதிய மோதல், பறையர் மீது காவல்துறையினரின் அடக்குமுறை, பறையர்களின் உழைப்பு, ஆதிக்கவர்க்கத்தினரின் உழைப்புச்சுரண்டல் போன்ற கருத்துக்களின் மூலம் தலித்திய கருத்தியல்கள் வெளிப்படுவதை உணரமுடிகிறது.

## தலித் பெண்ணிய கருத்தியல் வெளிப்பாடுகள்

பாமாவின் இரண்டாவது புதினம் சங்கதி. இப்புதினத்தில் இரண்டு விதமான போக்குகளை காணமுடிகிறது. அதாவது ஒருபுறம் பறையர் இனப்பெண்கள் ஆண்களுக்கு சமமாக மதிக்கப்படாத சூழலில் ஆணுக்கும் பெண்ணுக்குமான விசயங்களில் வேறுபாடுவதை எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர். இன்னொரு புறம் ஆசிரியர் கூற்றாக வரும் கதாபாத்திரம் சிறுவயது முதல் தன் பாட்டியிடம் ஒவ்வொரு விசயத்திலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இத்தகு வேறுபாடு காணப்படுவது குறித்து கேள்வி எழுப்பிக்கொண்டே இருக்க கூடிய நிலையையும் பார்க்கமுடிகிறது. புதினத்தின் வழி பறையர் இனப்பெண்ணுக்கும் ஆணுக்கும் உள்ள வேறுபாட்டை வகைப்படுத்தினால் கீழ் வருமாறு பார்க்கமுடிகிறது (Bama, 2019b).

- குழந்தையாக இருக்கும் போது பால் கொடுப்பதில் ஆண்குழந்தை என்றால் அதிக நாட்கள் பால்கொடுப்பதும், அதுவே பெண் குழந்தை என்றால் பால் குடிப்பதை மறக்கவைப்பதுமான வேறுபாடு உள்ளது.
- விளையாட்டிலும் ஆண்கள் விளையாடும் விளையாட்டை பெண்கள் விளையாடக் கூடாது. மீறி விளையாடினால் தவறான வார்த்தைகளால் திட்டும் நிலையை காட்டுகிறார்.
- வேலை செய்யும் இடங்களில் ஆண்களும் பெண்களும் சரிசமமான வேலைகள் செய்தாலும் ஆணுக்கு அதிக சம்பளமும், பெண்ணுக்கு குறைவான சம்பளமும் கொடுக்கப்படும் வேறுபாட்டை காட்டியுள்ளார்.
- ஊர்ப்பஞ்சாயத்து போன்ற பொதுவிடங்களில் பெண்கள் கலந்துக்கொள்வதற்கும், தங்கள் கருத்தை சொல்வதற்கும் உரிமை மறுக்கப்படுகிறது.
- ஆண்கள் சாப்பிட்டதன் பின்தான் பெண்கள் சாப்பிட வேண்டும் என்ற கட்டுப்பாடு.
- பெண்கள் நினைத்த நேரத்தில் கோயில் உள்ளே செல்வதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.
- பறையர் இனத்தில் பெரும்பாலும் ஆண்கள் குடும்பக்கட்டுபாடு செய்துக்கொள்வதில்லை. பெண் தான் ஆறு, ஏழு குழந்தைகளை பெற்ற பின் முதலில் குடும்பக்கட்டுப்பாடு செய்துக்கொள்கிறாள்.

அதனால் வேலைக்கு செல்ல வேண்டிய சூழலில் உடல்நலத்தில் பெரிதும் பாதிப்புக்குள்ளாவதும் பெண்கள் தான்.

- ஒரு ஆண் வேறு சாதி பெண்ணை காதலித்து திருமணம் செய்துகொண்டால் பெருமளவு கண்டுகொள்வதில்லை. அதுவே ஒரு பெண் வேறு சாதியைச் சேர்ந்த ஆண்மகனை திருமணம் செய்ய நினைத்தால் அப்பெண்ணை அவர்கள் வீட்டில் உள்ளவர்களே கொன்று புதைக்க வேண்டும் என்ற வெறியுடன் தாக்கும் நிலையை பதிவுச்செய்துள்ளார்.
- இதுமட்டும் அல்லாமல் பெண்களை மனரீதியாக காயப்படுத்தும் சில நிகழ்வுகளையும் ஆசிரியர் பதிவு செய்கிறார்.
- நினைத்த நேரத்தில் வேறு வெளியிடங்களுக்கு சென்றால் கூட உயர் சாதி ஆண்கள் பெண்களை பாலியல் தொந்தரவுக்கு உள்ளாக்குவது.
- உயர்சாதி ஆண்களால் தவறான பெண் என்று முத்திரை குத்தப்பட்டுவிட்டால் அவ்வினத்துப் பெண்களே, குற்றம் சுமத்தப்பட்ட பெண்ணை உண்மை என்னவென்று அறியமலே தகாத வார்த்தைகளால் திட்டும் சூழலில் பெண்களே பெண்களுக்கு எதிரியாக காணப்படக்கூடிய சூழலை அறியமுடிகிறது.
- கணவன் மனைவி சண்டைக்குள் ஒரு ஆண் ஏன் உன் மனைவியை இப்படி அடிக்கிறாய் என்று கேட்டுவிட்டால் போதும் உடனே அப்பெண்ணுக்கும், ஆணுக்கும் தகாத உறவு உள்ளது என்று கணவனே அப்பெண்னை தகாத வார்த்தைகளால் கூறி இழிவுபடுத்தும் நிலையும் காணப்படுகிறது.

இவ்வாறு புதினம் முழுக்க பறையர் இனப்பெண்கள் உடலாலும், மனதாலும் அடையும் இன்னல்களை கதைக்கோற்பிற்கு ஏற்ப அமைத்திருக்கிறார் ஆசிரியர். ஒருபுறம் பெண்களுக்கு நடைபெறும் இன்னல்களை பதிவு செய்தாலும் அதை எதிர்த்து கேள்வி கேட்க வேண்டும் என்ற மனநிலையை தூண்டும்படியான பதிவுகளையும் ஆசிரியர் அமைத்திருக்கிறார். அவ்வகையில் புதினத்தின் ஆசிரியர் கூற்றாக வரும் கதாபாத்திரம், ஆதிக்கவர்க்கத்தால் தவறான பெண் என்று ஊரில் உள்ளோர் எல்லாம் முடிவுகட்ட உண்மையை சொல்ல முடியாத சுழலில் தன் பாட்டியை,

“ஏம்பாட்டி, நீ ஊர்ல பெரிய மனுசிதான நீ போயி அன்னைக்கு ஊர்க்கூட்டத்துல உண்மைய சொல்லி இருக்கலாமுல்ல” என்று கேட்க அதற்கு பாட்டி தன் இயலாமையை சொல்ல, “அப்ப ஆம்பளைக என்ன சொன்னாலும் சரியாப் போயிருமா பாட்டி பொம்பளைக என்ன சொன்னாலும் தப்புத்தானாக்கும்?” என்று கேட்க அதற்கு பாட்டி “பொம்பளைக்குன்னு ஒரு அந்தஸ்து கெடையாது” என்று சொல்லவும் (Bama, 2019c).

“எங்கள எப்பப்பாத்தாலும் நீங்க தான மட்டந்தட்டியே வக்கீக. சின்னப்பிள்ளைல இருந்தே பெயல்கனா ஒருமாதிரி, பொட்டச்சின்னா ஒருமாதிரித் தான நடத்துறீக. இப்பிடி ஒரு கண்ணுல வெண்ணெயும் இன்னொரு கண்ணுல சுண்ணாம்மையும் வக்கிரதே நீங்கதான” என்றும் கேள்வி கேட்கிறாள்.

அதுபோல் மேல்காட்டிய ஆணுக்கும் பெண்ணுக்குமான ஒவ்வொரு வேறுபாட்டை குறித்தும் புதினம் முழுக்க கேள்விக்கூடிய சூழலையும் ஆசிரியர் காட்டுகிறார். இதனால் புதினத்தில் பெண்களின் இன்னல்களை மட்டும் குறிப்பிடாமல் வருங்காலத்தில் இது போன்ற நிகழ்வுகள் பெண்களுக்கு ஏற்படக்கூடாது என்ற உணர்வையும், சிந்தனையையும் வாசகர் மனதில் தூண்டும் முயற்சியாகவும் இதை பார்க்கமுடிகிறது.

## கருத்தியல் மாற்றம்

கருத்தியல்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் மனிதனின் செயல்முறைகள், சிந்தனையின் அடிப்படையில் மாற்றம் பெறக்கூடியவை. அதாவது ஒரு காலக்கட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் என்றால், ஆதிக்கவர்க்கத்தாரை எதிர்க்கமாட்டார்கள், கல்வி கற்காதவர்கள், உரிமையற்றவர்கள், அசுத்தமானவர்கள், மொழிநாகரிகமற்றவர்கள் என்ற நிலையிலே அவர்களைப் பற்றிய கருத்துக்கள்

இருந்தன. படைப்பிலக்கியங்களும் இக்கூறுகளின் அடிப்படையிலே அவர்களின் வலி நிறைந்த வாழ்வியலைப் பதிவுசெய்துவந்துள்ளன. அவ்வகையில் இமையத்தின் கோவேறு கழுதைகள், செடல் கண்மணி குணசேகரனின் அஞ்சலை ஆண்டாள் பிரியதர்ஷினியின் தகனம் போன்ற புதினங்களை பார்க்கலாம். ஆனால் பாமாவின் கருக்கு, சங்கதி, வன்மம் ஆகிய புதினங்களில் ஒடுக்கப்பட்ட மக்கள் பற்றிய இத்தகு கருத்துக்கள் சிறுபான்மையாகத் தான் இடம்பெற்றுள்ளது என்று கூறலாம். அவ்வகையில் ஒடுக்கப்பட்ட மக்கள் குறித்த கருத்துக்கள் பாமாவின் புதினங்களில் மாற்றம் பெற்றுள்ளன என்றும் கூறலாம். அதாவது ஒடுக்கப்பட்ட மக்களை கல்வி கற்றவர்களாகவும், உரிமைக்காக போராடுபவர்களாகவும், ஆதிக்க வர்க்கத்தாரை எதிர்ப்பவர்களாகவும் தன் படைப்புகளில் காட்டியுள்ளார். அவ்வகையில் பாமாவின் புதினங்கள் கருத்தியல் மாற்றத்திற்கு வித்திடுக் கூடியவையாக அமைந்துள்ளன என்று அறியமுடிகிறது.

## முடிவுரை

பாமாவின் மூன்று புதினங்களும் ஒடுக்கப்பட்ட பறையர் இனமக்களின் வாழ்வியலை விளக்கும் வண்ணம் உள்ளது. புதினத்தின் பல இடங்களில் பறையர் இனமக்களுக்கான மாற்றுச்சமுதாயத்தை உருவாக்கவேண்டும் என்ற ஆசிரியரின் எண்ணம் வெளிப்படுவதைக் காணமுடிகிறது. ஒவ்வொரு புதினத்திலும் சொல்லவந்த கருத்துக்கள் கதையோட்டத்திற்கு ஏற்ப ஒரு கட்டமைப்புடனும் அமைக்கப்பட்டிருப்பதை பார்க்கமுடிகிறது. புதினங்களின் முடிவுகளும் எதிர்காலச்சமூகம் இந்நிலையிலிருந்து மாற்றம் பெற வேண்டும் என்ற கருத்தியலை கொண்டே முடிவடைகிறது. மொத்ததில் பாமாவின் புதினங்கள் மூன்றும் தலித்தியம், தலித் பெண்ணியம் என்ற கருத்தியல்களை முன்வைத்தே படைக்கப்பட்டன என்பதை அறியமுடிகிறது.

## References

Bama (2019a) Vanmam, New Century Book House, Chennai, India

Bama (2019b) Karukku, New Century Book House, Chennai, India

Bama (2019c) Sangathi, New Century Book House, Chennai, India

Kanal Maithan, (2019) Thathuvam Kotpadu Karuthiyal, Anali, Chennai, India

Naseem, M.S.M. (2019) Samakala Arasiyal Karuthiyalkalum Avatrin Poruthappadukalum, Meesan Way, Srilanka

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License